## தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், தென்காசி.

முன்னிலை : திருமதி.J.கிறிஸ்டல் பபிதா, எம்.எஸ்.சி., எம்.எல்.,
தலைமை நீதித்துறை நடுவர், தென்காசி.

2026 ம் ஆண்டு ஜுலை திங்கள் 31 ஆம் நாள் வெள்ளிக் கிழமை

ஆண்டுப்பட்டிகை வழக்கு எண். 112/ 2017

C.N.R.No.TNTS02-000220-2017

அரசுக்காக :-
காவல் ஆய்வாளர்,
தென்காசி காவல் நிலையம்,
கு.எண் : 676/ 2009 . . . குற்றமுறையிடுபவர்

/ எதிராக /

ஜபார் (எ) சாகுல்ஹமீது
த.பெ. அப்துல் காதர்
கடையத்தெரு,
தென்காசி. . . . எதிரி

இந்த வழக்கானது 21.03.2017அன்று தென்காசி, நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் ஆண்டுப்பட்டிகை வழக்கு எண்.112/2017 ஆக கோப்பிற்கு எடுக்கப்பட்டு, பின்னர் தென்காசி, தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் அவர்களின் உத்தரவுப்படி இந்நீதிமன்றத்திற்கு மாற்றப்பட்டு, 25.03.2026 அன்று இந்நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு, இதுநாள் வரையில் பரிசீலனையில் இருந்து வந்த இவ்வழக்கு 24.07.2026 அன்று இறுதி விசாரணைக்கு வந்தபோது அரசுத்தரப்பில் அரசு கூடுதல் வழக்கறிஞர் திரு.R. சுரேஷ் அவர்கள் ஆஜராகியும், எதிரி தரப்பில் வழக்கறிஞர் திரு. C. தங்கராஜ் அவர்கள் ஆஜராகியும், வழக்கில் முன்னிடப்பட்ட சாட்சியங்கள் மற்றும்

சான்றாவணங்கள் ஆகியவற்றை பரிசீலனை செய்தும் இதுநாள் வரை இந்நீதிமன்ற ஆய்விலிருந்து இன்று (31.07.2026) இந்நீதிமன்றம் வழங்கும்...

## தீர்ப்புரை

1. **அரசு தரப்பு வழக்கின் சுருக்கம் :–**

கடந்த 25.11.2009 ம் தேதி காலையில் 2 வது சாட்சியின் தெருவான பொன்னிப்பாறை தெரு பைப்பில் தண்ணீர் பிடிக்கும் போது அதே தெரு அலாவுதீன் மனைவிக்கும் அவருக்கும் வாக்குவாதம் ஏற்பட்டுள்ளதாகவும், அதை மனதில் வைத்து அலாவுதீன் மகனான இவ்வழக்கின் எதிரி மற்றும் இதர எதிரிகளும் சேர்ந்து கொண்டு புகார்தாரர் அவரது வீட்டின் முன்பு நின்ற போது இவ்வழக்கின் எதிரி மற்றும் இதர எதிரிகள் புகார்தாரரை பார்த்து "தாம்மல பயல , தேவிடியா கூதிமகனே" என்று மூவரும் அசிங்கமாக பேசியதாகவும் இதர எதிரிகள் புகார்தாரை பிடித்துக் கொண்டு இவ்வழக்கின் எதிரி கீழே கிடந்த செங்கலை எடுத்து புகார்தாரரின் தலையில் இடித்து சிறுகாயம் உண்டுபண்ணியதாகவும், இதர எதிரிகள் நெஞ்சு மற்றும் முதுகில் கைகளால் அடித்து சாதாரண காயம் உண்டுபண்ணியதாகவும் அங்கு நின்ற சாட்சிகள் சத்தம் போடவும் இவ்வழக்கின் எதிரி மற்றும் இதர எதிரிகளுடன் சேர்ந்து "என்னைக்குனாலும் அடித்து கொல்லாமல் விடமாட்டோம்" என்று மிரட்டியதாகவும், எனவே எதிரி மீது இதச பிரிவுகள் 294(பி), 342, 506(2) ன் படி குற்றங்கள் புரிந்துள்ளதாக தென்காசி காவல் நிலைய காவல் ஆய்வாளர் அவர்கள் இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

2. அழைப்பாணையின்பேரில் ஆஜரான எதிரிக்கு வழக்காவணங்களின் நகல்கள் யாவும் கு.விமு.ச.207 பிரிவின் படி இலவசமாக வழங்கப்பட்டது.

3. இரு தரப்பு வாதுரைகளையும் ஆவணங்களையும் பரிசீலனை செய்து எதிரி குற்ற இறுதி அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கும் குற்றங்கள் புரிந்திருக்கக்கூடும் என்று கருதுவதற்கு போதுமான ஆதாரங்கள் வழக்கில் இருந்தமையால் எதிரி மீது இதச பிரிவுகள் 294(பி), 342, 506(1) – ன் படி

குற்றச்சாட்டுகள் வனையப்பட்டு குற்றச்சாட்டுகள் பற்றி எதிரியிடம் விளக்கிக்கூறி வினவியபோது எதிரி குற்றச்சாட்டுகளை மறுத்தனர். எதிரி குற்றச்சாட்டுகளை மறுத்த காரணத்தால் அரசுத்தரப்பு சாட்சிகளின் விசாரணைக்காக வழக்கு ஒத்தி வைக்கப்பட்டது.

4. இந்த வழக்கில் எதிரிக்கு எதிரான குற்றங்களை நிரூபிக்கும் பொருட்டு அரசுத்தரப்பில் அ.சா–1 மற்றும் அசா–2 சாட்சிகள் விசாரிக்கப்பட்டுள்ளனர். அரசுத்தரப்பில் அசாஆ–1 முதல் அசாஆ–6 வரையான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. எதிரி தரப்பில் சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் முன்னிலைப்படுத்தப்படவில்லை.

5. <u>இவ்வழக்கில் தீர்மானிக்க வேண்டிய பிரச்சனை யாதெனில்,</u>

அரசுத்தரப்பில் எதிரி மீது சுமத்தப்பட்டுள்ள இதச பிரிவுகள் 294(பி), 342, 506(1) – ன் படியான குற்றச்சாட்டுகளும் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா? இல்லையா? என்பதாகும்.

<u>6) தீர்வு</u> –

இரு தரப்பு வாதமும் கேட்கப்பட்டு வழக்கு ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது. அரசுத்தரப்பில், இவ்வழக்கின் எதிரி மற்றும் இதர எதிரிகள் புகார்தாரரை பார்த்து "தாம்மல பயல, தேவிடியா கூதிமகனே" என்று அசிங்கமாக பேசியதாகவும் இதர எதிரிகள் புகார்தாரை பிடித்துக் கொண்டு இவ்வழக்கின் எதிரி கீழே கிடந்த செங்கலை எடுத்து புகார்தாரரின் தலையில் இடித்து சிறுகாயம் உண்டுபண்ணியதாகவும், இதர எதிரிகள் நெஞ்சு மற்றும் முதுகில் கைகளால் அடித்து சாதாரண காயம் உண்டுபண்ணியதாகவும் அங்கு நின்ற சாட்சிகள் சத்தம் போடவும் இவ்வழக்கின் எதிரி மற்றும் இதர எதிரிகளுடன் சேர்ந்து "என்னைக்குனாலும் அடித்து கொல்லாமல் விடமாட்டோம்" என்று மிரட்டியதாக கூறப்பட்டு எதிரி மீது இதச பிரிவுகள் 294(பி), 342, 506(1) – ன் படியான குற்றச்சாட்டுகள் வனையப்பட்டுள்ளது.

7. இவ்வழக்கின் புகார்தாரரான அசா–1 சக்தி மணிகண்டன் என்பவர் தன்னுடைய சாட்சியத்தில் " எதிரி ஜபர் என்ற சாகுல்ஹமீது என்பவரை எனக்கு தெரியும். நான் எதிரியுடன் சமாதானமாக சென்றுவிட்டேன். தற்போது என்னிடம் காட்டப்படும் புகார் மனுவில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். புகார் மனுவில் என்ன எழுதியிருக்கிறது என்று எனக்கு தெரியாது" என்று கூறியுள்ளார். அசா–1 அரசுத்தரப்பு வழக்கை ஒத்து சாட்சியம் அளிக்காததால் அவர் அரசுத்தரப்பில் பிறழ்சாட்சியாக்கப்பட்டுள்ளார்.

8. இவ்வழக்கின் புகார்தாரரான அசா–1 அரசுத்தரப்பு வழக்கை ஒத்து சாட்சியம் அளிக்கவில்லை. இந்நிலையில் இதர சாட்சிகளை விசாரிப்பதால் எந்த பயனும் ஏற்படாது என்று கருதி அரசுத்தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டுள்ளது. எதிரியை இந்த வழக்கோடு இணைக்கும் வகையில் எந்த சாட்சியங்களும் அரசுத்தரப்பில் இல்லை. எனவே எதிரி மீதான குற்றச்சாட்டுகள் அரசுத்தரப்பில் நிரூபணம் செய்யப்படவில்லை எனவும் எனவே எதிரி குற்றவாளி அல்ல எனவும் இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

<u>முடிவு</u>:

9. முடிவாக, எதிரி மீதான இதச பிரிவுகள் 294(பி), 342, 506(1) –ன் படியான குற்றச்சாட்டுகள் அரசுத்தரப்பில் நிரூபிக்கப்படவில்லை என்றும், எனவே எதிரி குற்றவாளி அல்ல என்றும் முடிவு செய்து, எதிரியை இதச பிரிவுகள் 294(பி), 342, 506(1) –ன் படியான குற்றங்களிலிருந்து குற்றவியல் விசாரணை முறைச் சட்டம் பிரிவு 248(1) –ன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது. இவ்வழக்கில் எதிரி விசாரணை காலத்தில் பிணையில் இருந்து வந்துள்ள நிலையில், மேல் முறையீட்டு காலத்திற்கு பின் எதிரியின் பிணை பத்திரம் ரத்து செய்திட உத்தரவிடப்படுகிறது.

10. இவ்வழக்கில் சான்று பொருள் எதுவும் தாக்கல் இல்லை.

இந்த தீர்ப்புரையானது என்னால் சுருக்கெழுத்தாளருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, பின்னர் என்னால் பிழை திருத்தம் மேற்கொள்ளப்பட்டு 2026ம் ஆண்டு ஜுலை திங்கள் 31–ஆம் நாள் ஆகிய இன்று இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

J CHRISTAL BABITHA Digitally signed by J CHRISTAL BABITHA Date: 2026.07.31 13:42:34 +0530

உதவி அமர்வு நீதிபதி மற்றும்
தலைமை நீதித்துறை நடுவர், தென்காசி.

அரசு தரப்பு சாட்சிகள் : –

| அரசுத்தரப்பு சாட்சி எண் | சாட்சியின் பெயர் | விளக்கம் |
|---|---|---|
| 1 | திரு. சக்தி மணிகண்டன் | புகார்தாரர் |
| 2 | திரு. அந்தோணி பால்ராஜ் (உதவி ஆய்வாளர்) | புலன்விசாரணை அதிகாரி |

அரசு தரப்பு சான்றாவணங்கள் :–

| அரசுத்தரப்பு சான்றாவணம் எண் | சான்றாவணத்தின் விளக்கம் | நிரூபித்தவர் / சான்றளித்தவர் |
|---|---|---|
| 1. | புகார் மனுவில் அசா–1 ன் கையொப்பம் | அ.சா.1 |
| 2. | புகார் மனு | அ.சா.2 |
| 3. | முதல் தகவல் அறிக்கை | அ.சா.2 |
| 4. | பார்வை மகஜர் | அ.சா.2 |
| 5 | மாதிரி வரைபடம் | அ.சா.2 |
| 6 | காயச்சான்று | அ.சா.2 |

அரசு தரப்பு சான்று பொருட்கள்:– இல்லை.
எதிரி தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் :– இல்லை
எதிரி தரப்பு சான்று பொருள்கள் :– இல்லை

J CHRISTAL BABITHA Digitally signed by J CHRISTAL BABITHA Date: 2026.07.31 13:42:39 +0530

உதவி அமர்வு நீதிபதி மற்றும்
தலைமை நீதித்துறை நடுவர்,
தென்காசி.

<u>பின் குறிப்பு:–</u>

- ✓ எதிரி விசாரணை காலத்தில் பிணையில் இருந்து வந்தார்.
- ✓ சாட்சிகள் மூன்று நாட்களுக்கு மேல்விசாரிக்கப்படாமல் நிறுத்தி வைக்கப்படவில்லை.
- ✓ காவல் துறைக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது.